தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளம் விஞ்ஞானிகளுக்கான பெரிய தரவு பகுப்பாய்வு பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையமானது, சென்னையைச் சார்ந்த உயிர்த்தகவலியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் ஜீனோம் லைப் சயின்ஸ் என்ற நிறுவனத்தின் உதவியோடு மரபியல் மற்றும் பெரிய தரவு பகுப்பாய்வு என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிற்சி முகாமினை சனவரி 22, 23 ஆகிய நாட்களில் மாணவர்கள் மற்றும் இளம் விஞ்ஞானிகளுக்காக நடத்தியது.

வேளாண் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மரபியல் மற்றும் உயிர் தகவலியல் துறைகளில் திறனை மேம்படுத்த பயிற்சிகள் நடத்தப்பட வேண்டுமென்பதில் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் முனைப்புடன் உள்ளார். இதற்காக துணைவேந்தர் அவர்கள் ஜி.எல்.எஸ். குழுவுடன் கலந்தாலோசனை நடத்தி, இந்த இரண்டு நாள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. பயிர் மேம்பாட்டில், மரபியல் மற்றும் உயிர்தகவலியல் துறைகள் முக்கியக் கருவிகளாக விளங்குகின்றன.

அடுத்த தலைமுறை மரபியல் வரிசைப்படுத்தும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியின் காரணமாக பல்வேறு உயிரினங்கள் மற்றும் பயிர்கள் அதிக அளவில் பகுக்கப்பட்டு வருகின்றன. இதனால் பெரியதரவு பகுப்பாய்வு மென்பொருள்களின் வளர்ச்சி அத்தியாவசியமாகிறது. ஜி. எல். எஸ். நிறுவனத்தின் நிபுணர்கள் மற்றும் வேளாண்மை மரபியலில் ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு இத்துறையில் உள்ள முன்னேற்றங்களை எடுத்துரைத்தனர்.

இந்த இரண்டு நாள் பயிற்சி வகுப்பில் மாணவர்களுக்கு லினக்ஸ் மூலம் தரவு பகுப்பாய்வு போன்ற செய்முறை பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் இந்த பயிற்சியில் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மையில் முக்கிய மரபியல் ஆய்வுகளுக்கான பகுதிகளை கண்டறிய வித்திட்டது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்